## பத்திரிக்கைச் செய்தி

## அபராத தொகை இல்லாமல் வரி செலுத்த லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக வணிக வரி அலுவலர்கள் 4 பேருக்கு தலா 2 வருட சிறை தண்டனையும் மற்றும் தலா ரூ.4,000 அபராதம் விதித்து தீர்ப்பு

திரு.குணசேகர் என்பவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் ரசாயன நிறுவனம் நடத்தி வந்தார். கடந்த 24.09.2003 அன்று 1) திரு.கருணாகரன் (CTO), 2) திரு.சிங்காரவேலு (DTCO), 3) திருமதி.மகாலட்சுமி (ACTO), 4) திரு.மீனாட்சி சுந்தரம் (ACTO), 5) திருமதி.மாதேஸ்வரி (DCTO), 6) திரு.முத்துகிருஸ்னன் (ACTO) ஆகியோர் புகார்தாரராகிய திரு.குணசேகர் என்பவரின் ரசாயன நிறுவனத்தை ஆய்வு செய்தார்கள். 2003ம் ஆண்டு குஜராத்திலிருந்து தனது நிறுவனத்திற்கு தின்னர் வாங்கியதில் ரூ.59,440/- அபராத தொகை இல்லாமல் வரி செலுத்துவதற்காக தலா ரூ.2,000/- வீதம் 6 பேருக்கும் ரூ.12,000/- கையூட்டாக கேட்டனர். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் தஞ்சாவூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் 1) திரு.கருணாகரன் (CTO), 2) திரு.சிங்காரவேலு (DTCO), 3) திருமதி.மகாலட்சுமி (ACTO), 4) திரு.மீனாட்சி சுந்தரம் (ACTO), 5) திருமதி.மாதேஸ்வரி (DCTO), 6) திரு.முத்துகிருஸ்னன் (ACTO) ஆகியோருக்கு எதிராக புகார் மனு அளித்தார். இதன் பேரில் தஞ்சாவூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.சுரேஸ், அலுவலக உதவியாளர் லஞ்ச பணமான ரூ.12,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது தஞ்சாவூர் மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கு நடைப்பெற்றுகையில் திரு.சிங்காரவேலு (DTCO), 2) திரு.மீனாட்சி சுந்தரம் (ACTO) மற்றும் திருமதி.மாதேஸ்வரி (DCTO) ஆகியோர் இறந்துவிட்டனர். ,இன்று 06.12.2022 இவ்வழக்கில் குற்றவாளிகள் 1) திரு.கருணாகரன் (CTO), 2) திருமதி.மகாலட்சுமி (ACTO), 3) திரு.முத்துகிருஸ்னன் (ACTO) மற்றும் 4) திரு.சுரேஸ், அலுவலக உதவியாளர் ஆகியோர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.12,000/- லஞ்சம் கேட்ட மற்றும் பெற்ற குற்றத்திற்கு ஒவ்வொருவருக்கும் தலா 2 வருடங்கள் சிறை தண்டனையும் ரூ.4,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.